# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

பதிவ எண்:

நேரம்: 3.00 மணி

## பொதுத்தமிழ்

மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **14×1=14**

1. பாயிரம் இல்லது ............... அன்றே.

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

2. அழகிய பெரியவன் எழுதிய எந்த நூல் தமிழக அரசின் விருது பெற்றது?

அ) அருபநஞ்சு ஆ) பெருகும் வேட்கை

இ) தகப்பன் கொடி ஈ) நெரிக்கட்டு

3. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ............ தினை.

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

4. நெய்தல் திணைக்கான சிறுபொழுது ..............

அ) யாமம் ஆ) வைகறை இ) ஏற்பாடு ஈ) மாலை

5. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள்

அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்

ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி

6. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

அ) வரை - மலை ஆ) வதுவை - திருமணம்

இ) வாரணம் - யானை ஈ) புரவி - கடல்

i) அ, ஆ, இ - சரி, ஈ - தவறு ii) ஆ, இ, ஈ, சரி - அ, தவறு

iii) அ, இ, ஈ, சரி , ஆ) - தவறு iv) அ, ஆ, ஈ - சரி, இ - தவறு

7. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு ............

அ) உரிச்சொற்றொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

8. ஏா். ஆர்.ரகுமான் தம் இசைப்பயணத்தைத் தொடங்கிய திரைப்படம்

அ) பம்பாய் ஆ) தளபதி இ) ரோஜா ஈ) ஸ்லம்டாக்மில்லியனர்

9. பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்' - என்று குறிப்பிடும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம் இ) சீவகசிந்தாமணி ஈ) மணிமேகலை

10. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல் எது?

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்

11. நிழல் போல தொடர்ந்தான் - எவ்வகை உவமை?

அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு

12. 'அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

13. பூஜை, விஷயம், உபயோகம், என்பவை முறையே ........ என்று தமிழில் வழங்கப்படும்.

அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி

இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) செய்தி, வழிபாடு, பயன்பாடு

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



14. 'தாகூரின் கடிதங்கள்' என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர்
அ) சுந்தரராமசாமி ஆ) இறையன்பு
இ) த.நா. குமாரசுவாமி ஈ) முத்துலிங்கம்

## பகுதி -II

### பிரிவு - அ

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:** **3×2=6**

15. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் செல்கிறது?
16. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?
17. சிங்கி பெற்ற பரிசுப்பொருட்கள் நான்கினை எழுதுக.
18. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?

### பிரிவு - ஆ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:** **2×2=4**

19. பேச்சுமொழி எழுத்து மொழியைக்காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டு சக்தி மிக்கது. ஏன்?
20. ஒலோகமா தேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?
21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

### பிரிவு - இ

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி:** **7×2=14**

22. *ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்கள் தருக.*
அ) Despatch ஆ) Consumer
23. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:*
அ) வாழ்தல் ஆ) உண்டான்
24. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.*
அ) செங்கயல் ஆ) மணிக்குலம்
25. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று :*
ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டுருக்கும் போது எல்லாத்தையும் கவனமாகப் பதிய வைக்கனும்.
26. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுது* - வலி, வளி, வழி
27. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக :*
சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.
28. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:*
அறிவில்லாதவன் (அல்லது) கால்நடை
29. *விடைக்கேற்ற வினா அமைக்கவும்:*
அ) தமிழ் இதழியல் துறையில் கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் பாரதி
ஆ) நீலகேசி என்பது ஐஞ்சிறுங்காப்பியங்களுள் ஒன்று.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

30. குறியீட்டின் பொருளை எழுதுக :

அ)       ஆ) 

## பகுதி - III

### பிரிவு - அ

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2×4=8

31. "சலச வாவியல் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச் சிந்து என்பதை விளக்குக.
33. விரும்பியதை அடைவது எப்படி? குறள் வழி விளக்குக.
34. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும் போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துக்களாக திருச்சாழல் உணர்த்துவன யாவை?

### பிரிவு - ஆ


எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 2×4=8

35. மசானபு ஃபுகோகா கூறும் ஐந்து விவசாய மந்திரங்கள் எவை?
36. சமணப்பள்ளியும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.
37. ஃபிரஸ்கோ ஓவியங்கள்: கற்றளிக் கோயில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
38. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்துவரிகளில் எழுதுக.

### பிரிவு - இ

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி: 3×4=12

39. உருவக அணி அல்லது பிறிதுமொழிதல் அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
40. கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுது.




41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
    அ) யானைக்கும் அடிசறுக்கும்
    ஆ) விளையும் பயிர் முளையிலே தெரியும்
42. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன - ஏன்?
43. தமிழாக்கம் தருக :
    அ) In nature light creates the colour. In the picture colour creates the light.
    ஆ) Look deep into nature and then you will understand everything better.
    இ) An eye for an eye only ends up making the whole world blind.
    ஈ) You must be the change you wish to see the world.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **3×6=18**

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரைக்க.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. அ) 'யானை டாக்டர்' வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

அ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

**4+2= 6**

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:

அ) "சிற்றூரும் ..............." எனத்தொடங்கும் புரட்சிக்கவி பாடல்.

ஆ) "விடற்கு" என முடியும் குறள்.

--------